# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 09.08.2022 supeedsam.com supeedsam@gmail.com







## இன்று கொழும்பில்

# மீண்டும் சுனாமி அலை

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை இன்று போராட்டத்திற்கு தடை கோரிய பொலிஸார்; கொடுக்க மறுத்து நீதிமன்றம் உத்தரவு

இன்று அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இணைந்து ரணில் ராஜ பக்சவுக்கு எதிராக மக்கள் கட்டளை பிறப்பிக்க உள்ளதாக தொழிற்ச ங்க கூட்டமைப்பின் பிரதிநிதியும், ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பி னருமான வசந்த சமரசிங்க தெரி வித்துள்ளார்.

விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன் றில் அவர் இந்த அறைகூவலை விடுத்துள்ளார்.

ரணில் ராஜபக்ச கலப்பு அரசாங் கத்தை அமைத்தாலும் அது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு அல்ல.

ரணில் விக்ரமசிங்க அதிபர் நாற் காலியில் அமர்வதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## தமிழீழ விடுதலை போராட்டத்தில் பங்கேற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும்

### ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி பரிந்துரை




தமிழீழ விடுதலை போராட்டத்தில் பங் கேற்ற அனைவரையும் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண் டும் என பொதுபல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலை மையிலான ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதி பதி செயலணி பரிந்துரைத்துள்ளது.

இவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அல் லது சமூகமயப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து பொதுமன்னிப்பளிக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலணியின் அறிக்கை முன் னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச விடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செய லணி தனது அறிக்கையில் 43 விடயங்க ளைப் பரிந்துரைத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## சர்வகட்சி அரசில் கூட்டமைப்பு கட்டாயம் பங்கேற்க வேண்டும்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் அமையவிருக்கும் சர்வகட்சி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டடமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியன உள்ளடக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்வாறு சுயாதீன அணியின் முக்கியஸ்தரும் நாடாளு மன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...


## கூட்டமைப்பு பலமாக இருக்கின்றது

### மூன்று கறுப்பாடுகள் உள்ளது என்கின்றார் செல்வம்

தமிழ் தேசிய கூட்டமைப்பு பலமாக இருக்கின்றது என்றும் இருப்பினும் அதில் இருக்கும் மூவரின் செயற்பா டுகளினால் மக்களினுடைய மனதில் நம்பிக்கை குறைந்துவருவதாகவும் தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவித் துள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன் னணியின் பத்தாவது தேசிய மாநாட் டில் உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இந்த செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும்



02 ஆம் பக்கத்தில்...

## அரிசியின் விலை குறைவடையும்!

கடந்த காலங்களில் சந்தையில் அதிகரித்துள்ள அரிசியின் விலை எதிர்வரும் சில தினங்களில் குறை வடையும் என அரிசி உற்பத்தியாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால், சந்தையில் அரிசி விற்பனையும் குறைந்துள்ளதாகவும் அச்சங்கம் கூறியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையை சுபீட்சமான நாடாக மாற்ற ரணிலுக்கு திறமை உள்ளது; எகிப்து ஜனாதிபதி



இலங்கையை முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கு இட்டுச் செல் வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசி ங்கவிற்கு உள்ள திறமையில் எகிப்து அரசாங்கம் நம்பிக்கை கொண் டுள்ளது என எகிப்து அரபுக் குடியரசி ன் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி தெரிவித்துள்ளார்.

எகிப்து அரபுக் குடியரசின் ஜனா திபதி அப்தெல் பத்தா அல் சிசி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் . மேலும் இரு நாடுகளின் பொதுவான நலன்களை முன்னெடுப்பதற்கும், இரு நாட்டு மக்களுக்கு மிகவும் வளமான எதிர் காலத்தை உறுதி செய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்











## சர்வக்கட்சி அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை



சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஜே.வி.பி. ஒருபோதும் பங்குதா ரியாக இருக்காது என்று அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் னெத்தி தெரிவித்தார்.

சர்வக்கட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசி ங்க, பல்வேறு அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதோடு,

02 ஆம் பக்கத்தில்...

# கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவிப்பு!

**(பைஷல் இஸ்மாயில்)**

கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்ற கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரினால் கல்முனை மாநகர ஆணையாளராக அன்மையில் நியமிக்கப்பட்ட ஏ.எல்.எம்.அஸ்மி (08) திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோது அவரை கல்முனை மேயரினால் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் கல்முனை மாநகர ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட என்.சிவலிங்கம், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோதும் அவரும் தடுக்கப்பட்டார்.

இவ்வாறு தொடர்ச்சியாக கல்முனை மாநகர ஆணையாளர்கள் பதவியேற்காமல் தடுக்கப்படுவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரை தொடர்புகொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் ஆளுநர்



மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகளில் மேயர் ஒருபோதும் தலையிட முடியாது. தனக்குரிய அதிகாரத்தின் கீழ் மாநகர ஆணையாளர் நியமணத்தினை மேற்கொண்டுள்ளேன். இதனை ஒருபோதும் கல்முனை மேயர் சவாலுக்குட்படுத்த முடியாது. இதனால், கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் கடமைகளை பொறுப்பேற்க மேயர் அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல், தொடர்ச்சியாக ஆணையாளர்கள் கடமைகளை பொறுப்பேற்பதற்கு இடையூறு விளைவிக்கப்படும் பட்சத்தில் கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

# கல்முனை வலயக் கல்வி பணிப்பாளராக நஜீம் நியமனம்!

**( காரைதீவு நிருபர் சகா)**

கல்முனை வலய கல்வி பணிப்பாளராக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து நியமன கடிதங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது .

மருதமுனையை சேர்ந்த நஜீம், இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார். விஞ்ஞான பட்டதாரியான நஜீம்விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

15 வருட கல்வி நிருவாக சேவையிலுள்ள நஜீம் நாளை பத்தாம் தேதி முதல் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்கிறார்.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஜூன் மாதம் 16ஆம் தேதி திருகோணமலையிலுள்ள மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றது .

நேர்முக தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியானது.அதன்படி இந் நியமனம் இடம்பெற்றது.



2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் தேதி இலங்கை கல்வி கல்வி நிர்வாக சேவையிலே இணைந்து கொண்ட அவர் ,கடந்த 2019 மூன்றாம் மாதம் 12ஆம் தேதி தரம் 1க்கு பதவி உயர்த்தப்பட்டார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணி மனைக்கு 2014 மார்ச் மாதம் மூன்றாம் தேதி நியமிக்கப்பட்டார்.

சம்மாந்துறை வலயத்தில் அதிகூடிய 8 அரை வருடங்கள் சேவையாற்றி நாளை பத்தாம் தேதி கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்கிறார்.

நஜீம் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்ற ஒரு சிறந்த நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்கது.

# போலியான நாடகத்திற்கு பகரமாக உண்மையான நிறைவேற்று குழு முறைமைக்கு பிரவேசிப்போம்

அதிகாரம் கொண்ட, பலமான நிறைவேற்று குழு முறைமையொன்றை பாராளுமன்றத்தில் ஸ்தாபிப்பதன் மூலம் இந்த பேரழிவில் இருந்து நாட்டை விடுவிக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன என பெயரளவில் உலகுக்கு காட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நாடகங்களுக்கு தாம் உடன்படவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வலுவான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பாராளுமன்ற குழு அமைப்பை நோக்கி நகர்வதன் மூலம் பாராளுமன்றத்தின் 225 பிரதிநிதிகளும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான வலுவான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் நலனுக்காக இக்காரியத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்



தார். நாடு பாரிய பேரழிவிற்குள்ளாகியுள்ள நேரத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது அனைவரினதும் நோக்கமாகும் எனவும், ஆனால் இன்றும் கூட இந்நாட்டு மக்களின் மனித உரிமைகளை மீறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சில மணித்தியாலங்களுக்கு முன்னர் கூட மாணவ செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இளைய தலைமுறை மர்மமான முறையில் கடத்தப்பட்ட வன்னமுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டில் இருபது இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு நிவாரணமும் ஊட்டச்சத்து ஆற்றல் தேவைப்பாடு உள்ளதாகவும், அந்த ஊட்டச்சத்துத் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான அளவு நிதி கூட நாட்டில் இல்லாத நிலை உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டின் தாய்மார்கள்,பிள்ளைகள், பிரஜைகள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக விசேட தலையீடு செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இத்தகைய தருணத்தில், நாட்டுக்கு கேடு விளைவிக்கும் எந்த செயற்பாட்டிலும் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஈடுபடாது எனவும் தெரிவித்தார்.

தேசிய மறுசீரமைப்பு திட்ட வரைவுக் குழுவின் விசேட கூட்டம் (08) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள்,தொழிற்சங்க பிரதிநிதிகள்,புத்திஜீவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர், இந்தக் குழு பல சந்தர்ப்பங்களில் ஒன்றுகூடி, தேசிய மறுசீரமைபுகளுக்கான வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரிசியின் விலை

இந்நிலையில் எதிர்காலத்தில் விலை குறையும் என அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ விடுதலை போராட்டத்தில் பங்கேற்றவர்களை

அவற்றில் தற்போது அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பு நடவடிக்கையுடன் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் அரசியல் கைதிகள் மீது நீதிமன்றில் பாரிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் அதனை கருத்திற் கொள்ளாது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் விசேட சட்டங்களாக நடைமுறையில் உள்ள கண்டி சட்டம், தேசவழமை சட்டம் மற்றும் முஸ்லீம் சட்டம் என்பன அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்காக அந்த சட்டங்களை நீக்குவது மற்றும் சீர்திருத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கான சரத்துக்களையும் அந்த செயலணி தமது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

## சர்வக்கட்சி அரசாங்கத்துடன்...

இவ்வாரத்திலும் ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்த தீர்மானித்துள்ளார்.

அந்த வகையில் இன்று ஜே.வி.பியினரை சந்தித்து சர்வக் கட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதபிதி பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இது தொடர்பாக இன்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்னெத்தி, நாளைய தினம் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் தமது கட்சி கலந்து கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். எவ்வாறாயினும், தற்போதுள்ள நிலையில் சர்வக்கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதில் எந்தப்பயனும் கிடையாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்ளவே இவ்வாறான முயற்சிகளின் தற்போது ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, தங்கள் கட்சி ஒருபோதும் இவ்வாறான சர்வக்கட்;சி அரசாங்கத்தில் இணையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டமைப்பு பலமாக இருக்கின்றது ...

ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என்றும் இதில் தனிக்கட்சி ஒன்று நாட்டாமை செய்யக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்றும் இல்லையேல் தமிழ் மக்களை நாம் காப்பாற்ற முடியாது என்றும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

வெறும் உதட்டளவிலேயே தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது என குற்றம் சாட்டிய அவர், உளப்பூர்வமான எவரும் விடுதலை தொடர்பாக பேசவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போது வந்தவர்கள் தமிழரசு கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்கின்ற செயலை செய்கின்றனர். என்றும் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகளை உடைத்த இராஜதந்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் பிரயோகிக்கின்றார் என்றும் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டினார்.

இருப்பினும் ரணிலின் கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற வகையிலும் ஒரு சிலர் கருத்து வெளியிட்டாலும் கூட்டமைப்பு பலமாகவே இருக்கின்றது என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

## சர்வகட்சி அரசில் கூட்டமைப்பு..

ஜனாதிபதி ரணிலுடன் கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின் போது தான் இதனை வலியுறுத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அதே போன்று மக்கள் விடுதலை முன்னணியும் முக்கியமான கட்சியாகும். எனவே, இந்த இரண்டு கட்சிகளும் நிச்சயமாக சர்வகட்சி அரசில் இடம் பெற வேண்டும் என்பதை நான் மிக முக்கிய காரணியாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினேன்.

இந்த இரண்டு கட்சிகளும் நிச்சயமாக சர்வகட்சி அரசைப் பிரதிநிதித்துவம் செய்வது அத்தியாவசியம் என்பதே எனது நிலைப்பாடாக இருக்கின்றது – என்று டலஸ் அழகப்பெரும எம்.பி. மேலும் கூறியுள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## இன்று கொழும்பில்

முன்னர் போராட்டம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களையும் முன் வைத்திருந்தார்.

நாற்காலியில் அமர்ந்த பின்னர் போராட்டம் சட்டவிரோதமானது, பாசிசவாதம் கொண்டது எனக் கூறுவது தவறானது.

ரணில் விக்ரமசிங்க வைத்து ராஜபக்சர்கள் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் கனவு இதுவல்ல. இதனை அதிபர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்திற்கு நாம் பகிரங்கமாகவே கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

ஆகையினால், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் தத்தமது நகரங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அனைவரும் தமது தொழில் இடங்களில் இருந்து வந்து போராட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, கொழும்பில் இன்று நடத்த திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்டத்தை தடுக்குமாறு பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கறுவாத்தோட்ட பொலிஸாரின் கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க நிராகரித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின் போது சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

பல அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே திராய்க்கேணி படுகொலையாகும்!

## காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் காட்டம்





(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்ட தமிழர்களின் அடையாளத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்பதற்காக 1983 களிலிருந்து தொடர்ச்சியாக திட்டமிட்டு பல படுகொலைகளை செய்துள்ளார்கள். உண்மையில் அது நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே. அந்த வகையில் குரூரமாக ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்ட திராய்க்கேணி படுகொலைக்கு இன்று 32 வருடங்களாகின்றன.

இவ்வாறு திராய்க்கேணி படுகொலையின் 32 வது வருட நினைவேந்தலின் போது உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் கூறுகையில்..

1990களில் ராணுவம் சில முஸ்லிம் இளைஞர்களின் உதவியோடு இங்கு செய்த இந்த குரூர கொலையானது, பரம்பரை பரம்பரையாக தமிழ்மக்களின் மனங்களிலே நினைவு கூறப்படும் .

இந்த பாமர மக்களை கொலை செய்தவர்களையும், எமது இனத்தின் மீது பாரிய அநியாயங்களை செய்தவர்களையும் நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்.

நாம் எந்த ஒரு இனத்திற்கோ சாதிக்கோ அநியாயம் செய்ய மாட்டோம். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்களும் அல்ல .ஆனால் எமது நிலங்களை சூறையாட வருபவர்களுக்கு எதிராக நாங்கள் தொடர்ச்சியாக போராடுவோம்.

முஸ்லிம் மக்கள் அனைவரும் இதில் சம்மந்தப்பட்டார்கள் என்று கூறவில்லை. ஆனால் ஒரு சில முஸ்லிம் இனவாதிகள் முன்னணியில் இருந்து செய்யப்பட்டதை நேரடியாக கண்ணால் கண்ட திராய்க்கேணி மக்கள் இங்கு பேசுகையில் கூறுகின்றனர்.

6 நாள் குழந்தையை கூட ஆலமரத்தில் அடித்து ஈவிரக்கம் இன்று கொன்றிருக்கின்றார்கள் .

இதுபோல் வீரமுனை ,உடும்பன் குளம் , நாவிதன்வெளி நீலாவண, காரைதீவு ,பாண்டிருப்பு போன்ற பல இடங்கள் இவர்களின் கைவரிசைக்கு இலக்காகி இருக்கின்றது.

அவர்களால் செய்த அழிப்பு ஒரு நாள். ஆனால் அது காலகாலமாக மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

தமிழ் மக்களின் அடையாளமே அழிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு. இன்னும் இந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை .ஒரு ஆறுதலுக்காவது ஒரு வழக்குத்தானும் போடப்படவில்லை. இந்த நிலையில் இங்கு இந்த மக்கள் ஐம்பது வீதமாக குறைந்து வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றார்கள் .

இன்னும் நீங்கள் குறைய கூடாது என்பதற்காகவே இத்தகைய நிகழ்ச்சிகளை நடாத்துகின்றோம். இந்த வரலாறு இளம் சந்ததியினருக்கு எத்தி வைக்கப்பட வேண்டும் என்பதையும், இனத்தின் மீது கை வைப்போரை மறக்கவும் மாட்டோம் ,மன்னிக்கவும் மாட்டோம் என்பதையும் தெளிவுபடுத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்றார்.

# போலிஸ் உத்தியோகத்தரின் முன்மாதிரியான நற்செயல்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற அரச சட்டத்தரணி காரியாலயத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் சார்ஜன்ட் கிட்னண் குலேந்திரன் என்ற உத்தியோகத்தர் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் கடந்த 3/8/2022 அன்று பணப்பை ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

அதனை பரிசோதித்து பார்த்த போது 75520/- பணமும் ஏனைய பெறுமதியான ஆவணங்களும் காணப்பட்டுள்ளது. உடனே குறித்த உத்தியோகத்தர் இவ்விடயத்தினை அவரது உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் முன்னிலையில் குறித்த பணத்தையும் ஆவணங்களையும் உரிய நபரிடம் சேர்த்துள்ளார்.

இவ்வாறான கடினமான சூழ்நிலையிலும் பணத்திற்கு ஆசைப்படாமல் இவ்வாறானதொரு நற்செயலை புரிந்துள்ளார்.



இலஞ்சம் ஊழல் சம்பந்தப்பட்ட பல உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் இவ்வாறான சில உத்தியோகத்தர்களின் நடத்தை போற்றப்பட வேண்டியதென மட்டக்களப்பு புத்தியீவிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# மூதூரில் தமிழ் பெயரில் வீதிகள்






(படங்கள்: வடமலை ராஜ்குமார்)

மூதூர் கட்டைப்பரிச்சானில் இரண்டு வீதிகளுக்கு பெயர் சூட்டி பெயர்ப்பலகை திறக்கும் நிகழ்வு நேற்று 06ம் திகதி இடம் பெற்றது.

இவ்வீதியில் ஒன்றுக்கு சங்கிலியன் தெரு என்றும் மற்றொன்றுக்கு பெரியார் தெரு என்றும் பெயர் சூட்டி பெயர்பலகை திறந்து வைக்கபட்டது.

இந்நிகழ்வில் பேராசிரியர்களான அ.சண்முகதாஸ் சி.மௌனகுரு சு.பாலசுகுமாரன் மற்றும் கனடா தமிழ் பாடசாலைகளின் தலைவர் ச.குகதாசன் மூதூர் பிரதேசசபை தவிசாளர் அருஸ் சம்பூர் பொலிஸ நிலைய பெறுப்பதிகாரி கட்டைப் பரிச்சசான் வட்டார பிரதேசசபை உறுப்பினர் ஜெயமாலா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து பேசுவது செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது

(நூறுல் ஹுதா உமர்)

ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து இப்போது பேசுவது அர்த்தம் அற்றது. அது செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது ஆகும் என தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அதற்கான தேவையோ, அவசியமோ இப்போது கிடையாது. ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபய ராஜபக்ஸ விலகியமையை அடுத்து ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியும் கலைந்து போய் விட்டது. ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பாக அவர்களுடன் நேருக்கு நேர் மிக கடுமையாக முரண்பட்டு கொண்டு வெளியேறியவன் நான் என்பதை இத்தருணத்தில் நினைவு படுத்துகின்றேன்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று நீங்கள் சொல்வது என்ன? என்று பல நூற்று கணக்கானோர் திரண்டிருந்த உயரிய சபையில் வைத்து கோத்தாபய ராஜபக்ஸவை நான் வினவினேன். அவருக்கு அதை பற்றி எதுவுமே தெரியாது என்றும் அதை அவர் அறிந்து கொள்வதற்காகவேதான் செயலணி அமைத்து இருக்கின்றார் என்றும் எனக்கு கோத்தாபய ராஜபக்ஸ பதில் தந்தார்.

எனவேதான் அவர் பதவி விலகியமையுடன் அந்த செயலணியும் இறந்து விட்டது, செயல் இழந்து விட்டது. சிலர் அதை பற்றி இப்போது பேசுவது நகைச்சுவையாக, கோமாளித்தனமாக தெரிகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து தற்போது பேசுவது அர்த்தம் அற்றது , செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

# திருமலையில் அரசியல் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம்







(வடமலை ராஜ்குமார்)

100 நாட்கள் செயல்முனைவின் 08 ம் நாள் போராட்டம் வவுணியா மாவட்டத்தில் இன்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 08 ம் நாள் போராட்டம் இன்று (08.08.2022) திங்கள் கிழமை வவுணியா மாவட்டத்தின் காளிகோவிலடி குருமன்காடு பிரதேசத்தில் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் வவுணியா நகரத்தினை சேர்ந்த மக்கள் சிவில் அமைப்பினர் பெண்கள் அமைப்பினர் கிராமிய பெண்கள் குழுக்கள்,இளைஞர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தங்களுக்கான சம உரிமைகள் கிடைக்கப் பெறவேண்டும், நாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகள், ஆக்கிரமிக்கப்பட்ட எமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்,பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும், அரசியல் தீர்வை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம், எங்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம், எங்கள் போராட்டமானது அமைதியான போராட்டம் என பல கோசங்களை எழுப்பி நின்றனர்.

09ம் நாள் போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் நாளை (09.08.2022) திங்கள் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது என்பதனை தெரியத்தருவதுடன், இப்போராட்த்தினை வலுசேர்க்க இணையுமாறு வேண்டுகின்றேன்.



# கோக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற வரலெட்சுமி விரதம்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வரலாற்று சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வரலெட்சுமி விரத பூசைகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இதன் போது அதிகளவிலான மக்கள் கலந்து கொண்டு காப்புக்களை அணிந்து காணிக்கையான பூசைத் திரவியங்கள், நிறைகுடங்களுடன், இந்து சமய பாரம்பரிய கலாசார உடைகள் அணிந்து சிறியோர்கள் முதல் பெரியோர்கள் என ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் கலாசார உடையணிந்து சிவபெருமானின் அருள் வேண்டி விஷேட சிறப்பு பூசையில் கலந்து கொண்டிருந்தனர்.

# பாரிய மண் சரிவு ஏற்படும் அபாயம் போக்குவரத்துக்கு தடை





(வாஸ் கூஞ்ஞ)

மலையகப் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்து வந்த மழையின் காரணமாக மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியில் மோகினி எல்ல பகுதிகளில் உள்ள லக்சபான தோட்ட வாழமலை பிரிவிற்க்கு உரித்தான நல்லதண்ணி பிரதான வீதியில் சுமார் 200 மீட்டர் தேயிலை செடிகளில் உள்ள பாரிய மண் திட்டுகள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

-சரிந்து விழும் அபாயத்திலுள்ள மண் திட்டுப் பகுதியில் பாரிய வெட்டுக்கள் ஏற்பட்டு உள்ளதால் அந்த வீதியை உடன் அமுலாகும் வரையில் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இவ் பாதையை மூடுவதற்கான நடவடிக்கையை நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட அவர்களின் பணிபுரையில் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ரஞ்சித் அலககோன் அவர்களினால் ஞாயிற்றுக் கிழமை (07.08.2022) மதியம் நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இணைந்து இவ் வீதியை மூடியுள்ளனர் .

மேலும் அப் பகுதியில் உள்ள அனைத்து இளைஞர்கள் ஒன்றினைந்து 24 மணி நேரமும் கண்காணித்து வருவதாகவும் அவ்வப்போது இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திங்கள் கிழமை (08.08.2022) காலை நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட அவர்கள் மற்றும் நில ஆய்வு செய்ய ஆய்வாளர்கள் வந்து நிலத்தை ஆய்வு செய்ய உள்ளதாக ரஞ்சித் அலககோன் தெரிவித்துள்ளார்.

# நாவலப்பிட்டியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 600 குடும்பங்களுக்கு உணவுப் போதிகள் வழங்கி வைப்பு









(நாவலப்பிட்டி நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனமான Global Ehsan Relief, அண்மையில் மலையகத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள 600 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகளை வழங்கியது.

திருகோணமலை அரசாங்க அதிபர் பி.எச். என். ஜெயவிக்ரம அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி பிரதேச செயலகத்தின் செயலாளர் சமீர நுவன் ரத்நாயக்க, காணி அதிகாரி ஷிரந்த உதயகுமார மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கண்டி அரசாங்க அதிபர் சந்தன தென்னகோன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்களான லலித் எதம்பாவல மற்றும் உத்பலா ஜயரத்ன ஆகியோரினா மேற்பார்வையில் இந்த நிவாரணப் பணிகள் வழங்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

# மோனராகலை அரசாங்க அதிபர் காட்டுப் பாதையில் தினமும் அவதானம்

( காரைதீவு நிருபர் சகா)



மொனராகலை அரசாங்க அதிபர் குணதாச சமரசிங்க கதிர்காம காட்டுப் பாதையில் பயணிக்கும் பாதயாத்திரை அடியார்களின் சேமநலன்களை தினமும் பார்வையிட்டு, அவதானித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

கள்ளவியாழையிலிருந்து கதிர்காமம் வரைக்குமான குடிநீர் வினியோகம் மற்றும் அன்னதானம் சேமநலன்கள் தொடர்பாக தினமும் ஆராய்ந்து வருகிறார்.

அவ்வப்பொழுது அவதானித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அந்த வகையில், கள்ள வியாழையில் அமைந்திருக்கின்ற அன்னதான சாலையையும் அவதானித்து அங்கு சோறு உட்பட கறி சமைக்கின்ற விதத்தையும் சுகாதார முறைப்படி உணவு தயாரிக்க படுகின்றதா? என்பதையும் நேரடியாக சுகாதார பரிசோதகர்களோடு பார்வையிட்டு வருகின்றார்.

அன்னதானம் தொடர்பாக அவர் திருப்தி தெரிவித்தார் .

அவருடன் மேலதிக அரசாங்க அதிபர் பிரதீப் குணதிலக,

மற்றும் போலீஸ் அத்தியட்சகர் சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட பல உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

பக்தர்களோடும் பேசி சுயநலன்களை பங்கிட்டு கொண்டார்.

# அம்பாறை மத்திய முகாமில் நூறுநாள் உரிமை போராட்டம்



( காரைதீவு நிருபர் சகா)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக (7)ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மத்திய முகாமில் நூறு நாள் உரிமை போராட்டம் நடைபெற்றது.

இதன் கருப்பொருள் 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' என்பதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நான்காம் கிராமம் ஸ்ரீ பாமடி சித்தி விநாயகர் ஆலயமூன்றில் இருந்து நடைபவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

1,)நாங்கள் நாட்டை துண்டாக்கவோ தனியரசு கேட்கவில்லை இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம் .

2,வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் .

3,13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கலுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது அத்தோடு காலாகாலமாக சிங்கள தலைமைத்துவங்கள் பல்வகையான ஒப்பந்தங்களை தமிழ் தலைமைத்துவங்களோடு செய்து கொண்டாலும் இன்றுவரை அவை எங்களுடைய மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது .

அந்த அடிப்படையில் மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் ஏழாவது நாளான நேற்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது .

சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்தவர்கள் ,விவசாய அமைப்புகளைசேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.




# கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் வருடாந்த போதுக் கூட்டமும் புதிய நிர்வாக தேரிவும்



2022ம் ஆண்டிற்கான புதிய தலைவராக மீண்டும் பேரின்பராசா சடாற்சரராஜா அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக மீண்டும் பாலசிங்கம் ஜெயதாசன் அவர்களும், பொருளாளராக மீண்டும் குமாரசாமி தயாசிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவராக சண்முகம் தங்கராஜா அவர்களும், உப செயலாளராக மதிராஜ்; அவர்களும் தெரிவு செய்யப்பட நிர்வாக உறுப்பினர்களாக தவராஜா சஜிதராஜ், சாரங்கப்பாணி அறிவழகன், வீரக்குட்டி வசந்தமோகன், கணேசன் கிருஸ்ணராஜாஜி, பீட் ஜோசப், இராஜவேல் உமாபதி, மத்தேயு யேசுராஜா, கண்ணையா தருமரெட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட உதைபந்தாட்ட முகாமையாளராக செல்வராஜா தேவராஜன் அவர்களும், கிரிக்கெட் முகாமையாளராக சந்திரசேகரம் யசோக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்தும் போசகர்களாக மாணிக்கம் உதயகுமார் அவர்களும் வடிவேலன் வினோபா இந்திரன் செயற்படுவார்கள் என ஏகமனதாக முடிவெட்டப்பட்டது. கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபையின் பிரதிநிதிகளாக செல்வராஜா ரஞ்சன் (இலங்கை), சண்முகம் காசிப்பிள்ளை (இலங்கை), ஏரம்பமூர்த்தி சிவநாதன் (இலங்கை), புவணசிங்கம் வசீகரன் (இங்கிலாந்து), இராமநாதன் உதயராஜன் (இங்கிலாந்து) செயற்படுவர் என ஏகமனதாக முடிவெட்டப்பட்டது.

# ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல வருடாந்த திருவிழா- ௨௦௨௨






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்கிழங்கையில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க யாத்திரைத்தலமாக திகழ்ந்துகொண்டிருக்கும் ஆயித்தியமலை, தூய சதா சகாய அன்னை திருத்தலம் இலங்கை திருநாட்டில் தூய சதாசகாய அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட முதல் தேவாலயமாகும்.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் ஆயித்தியமலை என்னும் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமத்தில் சகாய அன்னை திருத்தலம் அமைந்துள்ளது. மட்டு நகரிலிருந்து வலையிறவு வவுணதீவு ஊடாக 17 கிலோமீற்றர்களும் மட்டு. நகரிலிருந்து செங்கலடி பதுளை வீதி கரடியனாறு ஊடாக 28 கிலோமீற்றர் தொலைவில் ஆயித்தியமலை சகாய அன்னையின் திருத்தலம் அமைந்துள்ளது.

கடந்த 1954ம் ஆண்டு உலக மரியன்னை ஆண்டில் அருட்தந்தை.ஜோர்ஜ் வம்பேக் அடிகளார் ஓர் ஓலைக்குடிலை அமைத்து அதில் தூய சதா சகாய அன்னையின் படமொன்றினை வைத்தே இவ் ஆலயத்தினை ஆரம்பித்திருந்தார்.

அக்காலப்பகுதியில் மறைமாவட்ட ஆயராகப்பணியாற்றிய அதிவந்தனைக்குரிய இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்களே முதலாவது திருநாள் திருப்பலியினை நிறைவேற்றினார்.

1980 இற்கு முன்னர் இவ்வாலயத்திற்கு இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வந்துசெல்லும் வழக்கம் இருந்தது. இதனால் வழிபாடுகள் யாவும் தமிழிலும், சிங்களத்திலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியிலே இது தேசிய யாத்திரைத் திருத்தலமாக அரசினால் பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை வெளியிடங்களிலிருந்து வருகை தந்த பக்தர்கள் ஆலய வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பையும் வழங்கிவந்துள்ளனர்.

அதேபோன்று தற்போதும் ஆலய விழாவிற்கு இலங்கையின் அனைத்து பாகங்களிலும் இருந்தும் அதிகளவிலான அன்னையின் பக்தர்கள் வருகை தருவதுடன், பெருந்திரளானோர் முன்னையைப்போன்றே ஆலயத்திற்கு யாத்திரையாக வருவதும் வழமையாகவே நடைபெற்றுவருகின்றது.

அன்னைக்கு வைத்த நேர்த்தியை நிறைவேற்றும் வண்ணம் ஆலய வளாகத்தில் சிறு குடிசை அமைத்து நவநாள் காலங்களில் ஆலயத்தினை பராமரிக்கும் செயற்பாடுகளில் அன்னையின் பக்தர்கள் ஈடுபட்டுவருவதுடன், அன்னையை வழிபடுவதும் வழமையாகவே காணப்பட்டுவருகின்றது.

அன்னையின் 68 வது வருடாந்த திருவிழாவானது, திருத்தலத்தின் பங்குதந்தை அருட்பணி இருதயநாதன் ஜெமில்ரன் அடிகளார் தலைமையில் எதிர்வரும் 26.08.2022 திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. கொடியேற்றத்தினை தொடர்ந்துவரும் நவ நாட்காலங்களில் தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து திருப்பலி, மறையுரை, அன்னையின் ஆசீர் என்பன இடம்பெறவுள்ளது.

அதே வேளை அன்னையின் திருத்தலம் நோக்கிய பாதயாத்திரை எதிர்வரும் 03.09.2022 ஆந் திகதி புளியந்தீவு, புனித மரியாள் பேராலயத்திலிருந்தும், செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்திலிருந்தும் காலை 5.15 மணி திருப்பலியின் பின்னர் வலையிறவு வவுனதீவு வழியாகவும், பதுளை வீதி கரடியனாறு வழியாகவும் திருத்தலத்தினை சென்றடையவுள்ளது. அன்று மாலை 6.30 மணியளவில் நற்கருணை ஆராதனையும் ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளது.

அன்னையின் பெருவிழா எதிர்வரும் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதுடன், முதலாவது திருப்பலி காலை 5.15 மணிக்கு சிங்களத்திலும் அதனைத் தொடர்ந்து திருவிழா சிறப்பு கூட்டுத் திருப்பலியானது காலை 7.15 மணிக்கு மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புகொடுக்கவுள்ளது. திருப்பலியின் நிறைவில், கொடியிறக்கத்துடன் ஆலய வருடாந்த திருவிழா இனிதே நிறைவுபெறவுள்ளது.



## ஆயித்தியமலை தூயசதாசகாய அன்னை திருத்தல யாத்திரை திருவிழா தோடர்பான விசேட கலந்துரையாடல்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு ஆயித்தியமலை தூயசதாசகாய அன்னை திருத்தலயாத்திரை திருவிழா 2022 தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை உள்ளிட்ட, குறித்த ஆலயத்தின் பங்குத்தந்தை உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பாதுகாப்பு பிரிவினர் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்து கொண்டிருந்ததுடன், எதிர்வரும் 26.08.2022 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 03.09.2022 திகதி பாத யாத்திரை இடம்பெற்று, 04.09.2022 திகதி திருவிழா காணவுள்ள ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல வருடாந்த திருவிழாவின் விசேட ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் பங்களிக்க பதவிகள் அவசியமில்லை

ஜனநாயகம் தார்மீகத்தை மறந்து நாகரீகமற்ற முறையில் முடிவுகளை எடுத்திருந்தால் இன்று தான் ஜனாதிபதியாகியிருக்க முடியும் எனவும், ஆனால் நெறிமுறையற்ற ஜனாதிபதியாக ஆகாமல்,மக்களின் விருப்பின்றி எந்தவொரு பதவிகளையும் எடுப்பதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழலை புரிந்து கொண்டு அனைவரும் நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும் எனவும், இதில் அமைச்சுப் பதவிகளை வகிக்காமல் நாடாளுமன்றக் குழு முறையின் ஊடாக கைகோர்த்து நாட்டைக் கட்டியெழுப்பத் தயார் எனவும் (6) அரநாயக்க தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று மக்கள் மிகுந்த துக்கத்திலும் வேதனையில் உள்ளனர் எனவும், 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எத்தகைய வரிசைகளும் இருக்கவில்லை எனவும், குறைந்த பணவீக்கத்துடன் சுயமரியாதையுடன் வாழ்ந்ததாகவும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதி தலைமையிலான ராஜபக்ஸ பரம்பரையின் மொட்டுக் குடும்ப ஆட்சியின் கவனக்குறைவான நிர்வாகத்தால்,தற்போது உலகம் முழுவதும் சென்று டொலர் தேடி பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறே தற்போதைய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிரப்பித்து மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து தொழிற்சங்க தலைவர்களைக் கூட வேட்டையாடுகின்றனர் எனவும்,ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூட ஒருமுறை பாராளுமன்றத்தில் ஜோசப் ஸ்டாலினின் கைதும் எகுக+ இழப்பிற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறினாலும்,அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற உடனேயே ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் எனவும்,இது முறையற்ற செயல் எனவும் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கொலைகள் போலவே வீடுகளுக்கு தீ வைப்பு போன்ற சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்ததாகவும், இத்தகைய செயல்களையும் போலவே அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அரச மிலேச்சத்தனத்தையும் தான் நிராகரிப்பதாகவும், அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயக உரிமைகளை மீற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.






## உலர் உணவுப் போதிகள்



**(வாஸ் கூஞ்ஞ)**

கடந்த ஒரு வாரமாக மலையகப் பகுதியில் பெய்து வந்த கடுமத் மழை காரணமாக அப் பகுதிகள் பெரும் வெள்ளக் காடுகளாக காட்சி அளித்ததுடன் அப் பகுதி மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையை இழந்து பரிதவித்த சம்பங்களும் இடம் பெற்றது.

இவ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்திருந்ததை கவனத்தில் எடுத்துக் கொண்ட செஞ்சிலுவை சங்கம் வட்டவளை பிரதேசத்தில் பாதிக்கபட்ட 66 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உளர் உணவு பொருட்கள் செஞ்சிலுவை சங்கம் ஊடாக சனிக்கிழமை (06.08.2022) வழங்கபட்டன.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செஞ்சிலுவை சங்க பணிப்பாளர் சமன் சந்திரசிறி மற்றும் வட்டவளை பிரதேச கிராம உத்தியோகத்தர் மிட்லன் பெரேராவட்டவளைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கபட்டவர்களுக்கு இவ் பொருட்களை வழங்கினர்.

இத்துடன் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று காரணமாக அதற்கான கிரிமிநாசினிகளும் வழங்கபட்டது குறிப்பிடத்தக்கது.






கன்னங்குடா உதய தாரகை விளையாட்டு கழகம் நடத்திய மாபெரும் கிரிக்கெட் போட்டி ஞாயிற்றுக்கிழமை ஏறாவூர்பற்று மற்றும் மண்முனை மேற்கு பிரிவிற்குரிய 20 அணிகள் பங்குபற்றியது. இப்போட்டியில் செங்கலடி பதுளை வீதி இராஜபுரம் யுகம்புரி விளையாட்டு கழகம் இரண்டாவது இடத்தை பெற்று வெற்றியீட்டியுள்ளது. இரண்டாம் இடத்தை பெற்ற இராஜபுரம் யுகம்புரி விளையாட்டு கழகத்தின் தலைவர் முத்துராஜ் சஞ்சீவன் வெற்றிக்கிண்ணத்தையும் பரிசுத்தொகையையும் பெற்றுக்கொள்வதையும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை யுகம்புரி விளையாட்டு கழகத்தின் வீரர் செல்வகுமார் விதுர்ஸ் பெற்றுக்கொள்வதையும் போட்டியில் பங்கு பற்றிய அணி வீரர்களையும் இங்கு காணலாம். (படம்: யசோதரன்)

# ஸ்டாலினை விடுதலை செய்யக் கோரி வாழைச்சேனை ஆசிரியர்கள் போராட்டம்





**(ந.குகதர்சன்)**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினை விடுதலை செய்யக் கோரி கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை ஆசிரியர்களினால் பாடசாலை முன்பாக இன்று திங்கட்கிழமை காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் அதிபர் கே.கமலசேகரம் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் தோழர் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கின்றோம், அரசே எமது செயலாளரை உடனடியாக விடுதலை செய் என்ற வாசகம் அடங்கிய பதாதைகளுடன் கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஆசிரியர்கள் ஈடுபட்டனர்.

நாட்டின் ஜனநாயகத்தினை நிலை நாட்டும் ஜனாதிபதி ஆசிரியர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினை உடனடியாக விடுதலை செய்ய முன்வர வேண்டும் என ஆசிரியர்கள் கோரக்கை விடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைதுசெய்யபட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலர் உணவு போதிகள் வழங்கி வைப்பு




**(ஹஸ்பர்**

கிண்ணிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சூரங்கல் கிராம சேவகர் பிரிவில் உள்ள கிண்ணியா அல் அமீன் பாடசாலையில் வறுமை கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களின் குடும்பகளுக்கு சுமார் 6000.00 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் பாடசாலை வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் (08) இடம் பெற்ற குறித்த நிகழ்வில் உலர் உணவுப் பொதிகளானது முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப் பட்டன.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழியர்கள் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# நற்குண முன்னேற்ற அமைப்பினால் 550 குடும்பங்களுக்கு உலருணவு

**(சாவகச்சேரி நிருபர்)**

நற்குண முன்னேற்ற அமைப்பினால் 05/08 வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 550 தேவைப்பாடுடைய குடும்பங்களுக்கு பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன் குறித்த உலருணவுப் பொதிகளை பயனாளிகளிடம் கையளித்திருந்தார்.இது தொடர்பாக பிரதேசசபை உறுப்பினர் குகானந்தன் கருத்து தெரிவிக்கையில்;

வறுமை நிலையில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக உதவித்திட்டங்களை மாத்திரம் நம்பியிராமல் சொந்த முயற்சி ஊடாக வறுமையில் இருந்து மீண்டெழ வேண்டும்.

குறிப்பாக சகலரும் வீட்டுத்தோட்டத்தை முன்னெடுத்து தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.மரவள்ளி,வற்றாளை, பப்பாசி உள்ளிட்ட பயிர்வகைகள் என்றும் எமக்கு கைகொடுக்கும் பயிர் வகைகளாக காணப்படும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.




# வாகுரவெட்டை காட்டுப் பாதையில் இலைக்கஞ்சி வழங்கல்



**( காரைதீவு சகா)**

கதிர்காம காட்டுப் பாதை வழியாக செல்லும் அடியார்களுக்கு, முதல் தரிப்பிடமான வாகுரவெட்டையில்( வண்ணாத்திர கிணற்றடி) இலைக்கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

பிரபல சமூக சேவையாளரும், காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அவர் தலைமையிலான குழுவினர் காட்டுக்குள் இவ் இலைக்கஞ்சியை காய்ச்சி சுடச்சுட வழங்கினார்கள்.

முதல் கட்டமாக நடந்து களைப்புடன் வந்த அடியார்களுக்கு அது தேவார்மிதமாக இருந்தது எனப் பலரும் கூறினர்.

யாழ் கதிர்காம பாதயாத்திரை அடியார்களும் இதில் பங்கேற்றார்கள்.



# பொருளாதார பிரச்சனை தீர்வதற்கு விசேட பிரார்த்தனை




**(ந.குகதர்சன்)**

முஸ்லிம்களின் புதுவருடமான முஹர்ரத்தினை முன்னிட்டு விஷேட நிகழ்வும், நாட்டின் ஜனாதிபதிக்கும், மக்களுக்கும் ஆசி வேண்டி துஆ பிராத்தனையும் இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவை நிறுவனத்தினால் ஓட்டமாவடி பாலைநகர் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சமூக ஆர்வளர்கள், பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனை தீர்ந்து நாட்டிற்கு நல்ல விடிவு காலம் கிடைக்கவும், நாட்டின் ஜனாதிபதி மற்றும் நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

ஓட்டமாவடி மீராவோடை இஸ்லாமிய கல்வி கலாசார நிலைய தலைவர் அஷ்ஷெய்க் எம்.மர்சூக்கினால் முஸ்லிம்களின் புதுவருடமான முஹர்ரத்தினை முன்னிட்டு விசேட உரை இடம்பெற்றதுடன், விஷேட துஆ பிராத்தனையை இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் ஹலீமினால் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பகல் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது.

# மட்டக்களப்பு -கோக்குவில் பகுதியில் அமைக்கப்படவுள்ள சந்தை கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு!!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

உலக வங்கியின் 5 மில்லியன் ரூபாய் நிதி அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள மட்டக்களப்பு - கொக்குவில் சந்தை கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வ நேற்று இடம்பெற்றுள்ளது.

பொது மக்களின் நலன் கருதி அப்பகுதி மக்கள் பொருட்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் நோக்குடனும், வியாபாரிகள் தமது பொருட்களை பாதுகாப்பாக விற்பனை செய்யவும் அமைக்கப்படவுள்ள குறித்த சந்தை கட்டிடம் பயனுள்ளதாக அமையவுள்ளது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்து குறித்த வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.



## கதிர்காமத்திலுள்ள ஏழு மலைகளை அறிவீர்களா?


# வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!!!











ஏழுமலையான் கதிர்காம கந்தன் ஆலயம் என்றால் அனைவருக்கும் கதிரைமலை ஞாபகத்துக்கு வரும்.

இந்த கதிரைமலையை ஏழுமலை என்றும் அழைப்பர்.

உண்மையில் அது மட்டுமல்ல அங்கு ஏழு மலைகள் உள்ளன. கதிர்காமத்தை சுற்றியுள்ள ஏழு மலைகளும் ஏழு வகையான மஹத்துவம் வாய்ந்தவை.

அதில் கதிரமலை மட்டுமே எல்லோரும் செல்ல அனுமதி உண்டு. அது தவிர வள்ளி மலை, தெய்வானை மலை, இடும்பன் மலை, நாக மலை, பச்சைமலை, களுகு மலை மற்றும் விபூதி மலை ஆகிய மலைகளுடன் சேர்ந்து ஏழுமலைகளின் அதிசய சக்தி கதிர்காம மண்ணை காலம் காலமாக இயக்குகிறது.

வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!.

இந்த ஏழுமலைகளில் விபூதி மலை பற்றி இம் முறை அறியக் கூடியதாக இருந்தது. இது மிகவும் சிறப்பான தன்மை வாய்ந்தது. கதிர்காமத்தில் இருந்து கித்துளபவ வழியாக சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இவ் விபூதி மலை அமைந்துள்ளது.

விபூதி மலையில் ஆடி மாதத்தில் திருவிழா காலங்களில் மட்டும் இயற்கையாக உற்பத்தியாகும் விபூதியே இங்கு பிரசாதமாக இன்றுவரை வழங்கப்படுகிறது.

குறிப்பிட்ட வம்சத்தினரே இன்றுவரை இங்கு திருநீறு எடுக்கின்றனர். கடந்த வாரம் இவ் விபூதிமலைக்கு சித்தர்கள் குரல் அன்பர்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் சென்று பூஜை செய்து முறையாக விபூதி எடுத்த அற்புதமான நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இது தொடர்பாக காலாகாலமாக விபூதி எடுத்து விற்பனை செய்து வரும் அங்குள்ள ரவீந்திரன் என்ற இளைஞரை பேட்டி கண்ட போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்..

'நாங்கள் பிறந்த நாளிலிருந்து இந்த தொழிலைத்தான் செய்து வருகின்றோம். இந்த விபூதி மலையானது கதிர்காம கந்தனின் ஆடிவேல் விழா திருவிழா காலத்தில் அதாவது 15 நாட்களில் மாத்திரம் தான் இப்படியாக மணல் போன்று விபூதியாக வரும். ஏனைய நாட்களில் வெள்ளை நிற பாறையாகவே இருக்கும் .உடைக்கவும் முடியாது . எடுக்கவும் முடியாது .இது கந்தன் அருளாகத் தான் இருக்கும் .' என்றார்.

விபூதி மலையை பார்ப்பதானால் வெள்ளிக்கிழமைக்கிடையில் சென்று பார்க்கலாம்.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**

## கோள்கைப் பிரகடன உரையை உயிரூட்ட சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவது அவசியம்



ஜனாபதியின் கொள்கைப் பிரகடன உரையை வாழ்த்திய எம்.பிக்கள், கட்சித் தலைவர்கள் சகலரும் சர்வகட்சி அரசாங்கத்தைக் கொண்டு செல்வதற்கான ஒத்துழைப்புக்களை ஜனாதிபதிக்கு வழங்க வேண்டுமென, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் அவர் நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலே இந்த வேண்டுகோளை அசாத் சாலி விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் தீர்க்கதரிசனம் ஜனாதிபதியின் உரையிலுள்ளதாக சகல கட்சிகளின் தலைவர்கள் மற்றும் எம்.பிக்கள் வாழ்த்தியுள்ளனர். இதை, வாழ்த்தியுள்ள சஜித் பிரேமதாஸ, நடைமுறைக்குச் சாத்தியமானால் இது நல்ல திட்டமாக அமையுமென்றும் தெரிவித்துள்ளார். எனவே, இது நல்ல திட்டமாக அமைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் வெற்றியடைந்துவிட்டது. எனவே, காலிமுகத்திடலில் எவருக்கும் வேலையில்லை. அவ்வாறு அரசியல் தேவைகள் இவர்களுக்கு இருந்தால், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள இடங்களில்தான் ஆர்ப்பாட்டங்ள் நடத்த வேண்டும். சுற்றுலாத்துறையினரைக் கவரும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை வழிமறித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது.

நாட்டின் அந்நியச் செலாவணி வருவாய்க்கு முக்கிய பங்காற்றும் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை பொதுமக்கள் விரும்பவில்லை. இதனால்தான், அப்போது இருந்தது போன்று இந்த அரகலவுக்கு அதிகம் பேர் வருவதில்லை. தங்கங்களுக்கான வரிகளை தளர்த்தி, சந்தையை சுதந்திரமாக விடுவதுதான் அந்நியச் செலாவணியை உழைப்பதற்கான இலகு வழி. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையே இப்போது தேவைப்படுகிறது.

சொந்தப் பிரதேசங்களில் மாணவர்கள் கற்பது, அவரவர் பகுதிகளில் ஆசிரியர்களை கடமையாற்ற அனுமதித்தால் போக்குவரத்து, எரிபொருள் பிரச்சினை பெரிதாக ஏற்படாது.

இவ்வாறான நடைமுறைகளை மேல் மாகாண ஆளுநராக இருந்த காலத்தில் தாம் முன்னெடுத்ததாகவும் அசாத் சாலி தெரிவித்தார்.

## இளம்பிறை கிண்ணத்தை தியாவட்டவான் அர் ரஷாத் சுவீகரித்தது



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவலடி இளம்பிறை விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரை தியாவட்டவான் அர் ரஷாத் அணி சுவீகரித்துக் கொண்டுள்ளது.

பதினாறு அணிகள் பங்குபற்றிய இத் தொடரின் இறுத்திப் போட்டி (7) கேணிநகர் அல் மதீனா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் தியாவட்டவான் அர் ரஷாத் மற்றும் நாவலடி இளம்பிறை அணிகள் மோதிக் கொண்டன.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய அர் ரஷாத் அணி ஐந்து ஓவர்கள் முடிவில் இரண்டு விக்கட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாவலடி இளம்பிறை அணி 4 விக்கட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது.

இறுதிப்போட்டி நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு தவேந்திரன், இளம்பிறை விளையாட்டுக் கழக ஆலோசகர் கைதர் அலி, கேணிநகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் அப்துல் கபூர் ஆகியோர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

## இந்து யாத்திரிகர் விடுதியில் இந்துக்களுக்கு கதவடைப்பா?

**( காரைதீவு நிருபர் சகா)**



கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் இந்துக்களுக்கு கதவடைப்பா? என்று இந்து அடியார்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் வரும் இந்த இந்து யாத்திரிகர் விடுதியில் இந்துக்களுக்கு அங்கு அறைகளோ, மண்டபமோ இம்முறை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அங்குள்ள முகாமையாளரிடம் கேட்ட பொழுது ..

எம்மிடமிருந்த 17 அறைகள் ,7 மண்டபங்களையும் கதிர்காம ஆலயம் ,பெரஹரா கலைஞர்களுக்கு என்று முன் கூட்டியே ஒதுக்கி உள்ளது. இதனால் வழமைபோல இங்கு வரும் பொது மக்களுக்கு அறை அல்லது மண்டபம் வழங்க முடியவில்லை .என்று தெரிவித்தார். கதிர்காமம் செல்லும் இந்துக்கள் உணர்வோடு சென்று ,நிம்மதியாக தங்குமிடமாக இந்த இந்து யாத்திரிகர் விடுதியை குறிப்பிடலாம் .அங்கு இம் முறை இவ்வாறு இந்துக்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டது மிகுந்த கவலையளிப்பதாக கூறுகின்றனர்.

இதேவேளை, அங்கு பல வருடங்களாக வழங்கப்பட்டு வந்த தெய்வீக பூமி அன்னதான குழுவினரின் அன்னதானம் இம்முறை நடைபெறவில்லை.

அதற்கு பொறுப்பாக இருந்த திரு.சிவஞானசுந்தரம காலமாகியதைஅடுத்து இம் முறை நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டது..

மொத்தத்தில் இந்து யாத்திரிகர் விடுதி சூழல் சோபையிழந்து வெறிச்சோடி காணப்படுகிறது.

# கதிர்காம பாதயாத்திரை வர்த்தமானி பிரகடனம் செய்யப்படவேண்டும்!

## வியாழ காட்டாற்று வெள்ள அனர்த்தத்திற்கான காரணங்கள் என்ன?

### பாதயாத்திரீகர்களின் அனுபவப் பகிர்வு

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழாவை ஒட்டிய பாதயாத்திரை இம்முறை பலத்த சோதனைகளுக்கு உள்ளாகி இருந்தது. அது மட்டுமல்ல இந்த பாதயாத்திரை அதன் புனிதத்துவத்தை இழந்துவிட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு பல அசாதாரண சம்பவங்களும், அனர்த்தங்களும் இடம்பெற்றிருக்கின்றன .

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை கடந்த மாதம் 22 ஆம் திகதி குமண சரணாலய நுழைவாயிலில் திறந்து வைக்கப்பட்டது. இது (5) வெள்ளிக்கிழமை பூட்டப்படுகிறது. இது வரை சுமார் 30 ஆயிரம் அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்து பயணத்தை மேற்கொண்டுள்ளனர் என தெரிகிறது.

இப் பாதயாத்திரை முறையாக சீரமைக்கப்பட வேண்டும். புனிதத்துவமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதன் கலாச்சாரம் பாரம்பரியம் பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்று அடியார்கள் பலர் ஆணித்தரமாக கருத்து தெரிவித்தார்கள்.

இந்த பாதயாத்திரை, குமண ,யால ஆகிய பாரிய பறவைகள் ,மிருகங்கள் வாழ்கின்ற சரணாலயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுவது தெரிந்ததே.

இம்முறை, வரலாற்றில் என்றும் இல்லாத அளவிலே யால சரணாலய பகுதியில் உள்ள வியாழ ஆற்றிலே திடீரென ஐந்து அடிக்கு காட்டாற்று வெள்ளம் வந்து பெரும் அனர்த்தத்தை அடியார்களுக்கு ஏற்படுத்தியது .

இது ஒரு தற்செயலான செயல் அல்ல. இது முருகனின் சோதனை. புனித பயணத்தை மாசுபடுத்துபவர்களுக்கு கற்பித்த பாடம் என்றெல்லாம் பல அடியார்களும் பல கருத்துக்களை கூறினார்கள்.

தற்பொழுது ஆடிவேல் திருவிழா இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் இந்த பாதயாத்திரை தொடர்பான அனுபவப் பகிர்வுகளையும் கருத்துகளையும் இங்கு பதிவிடுகின்றோம்.

**கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் (தவிசாளர், காரைதீவு) கூறுகையில்...**



இந்துக்களின் அடையாளமான கதிர்காம பாதயாத்திரையை புனித யாத்திரையாக வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும். ஏனைய சமய யாத்திரை மற்றும் விரதங்கள் போன்று அரசாங்கத்தினால் இதற்கான அத்தனை சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். அது மாத்திரம் அல்ல பாதயாத்திரை செல்வோரின் வயது கட்டுப்பாடுகள் நடைமுறை விதிகள் என்பன முறைப்படி கட்டமைக்கப்பட வேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும்.இம்முறை வியாழையில் நடைபெற்ற அனர்த்தம் என்பது முருகப்பெருமானின் சோதனை.

முறையற்ற ரீதியில் வழமைக்கு மாறாக பல சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வியாழ ஆற்றிலே திடீரென காட்டாற்று வெள்ளம். மூன்று பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்தமை. நற்பிட்டிமுனை பெண் அடியார் மரணித்தமை. சில இளைஞர்கள் யுவதிகள் பாதயாத்திரைக்கு பொருத்தமில்லாத உடையணிந்து விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டமை. சீட்டு விளையாடி பைலா அடித்தமை. ஒரிரு மாதக்குழந்தைகளுடன் பயணித்தமை. சகோதர இனத்தவர் பலர் நீளக்காற்சட்டை கோட்சூட் அணிந்து சூஸ் கண்ணாடி அணிந்து சுற்றுலா செல்லும் பாணியில் வந்தமை. இவ்வாறு பலவற்றை குறிப்பிடலாம்.

இவைகளுக்கு பாடம் புகட்டும் முகமாக இந்த அனர்த்தம் மற்றும் தொடர் மழை இடம்பெற்று இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.


இனிவரும் காலங்களில் ஆசார பூர்வமாக பக்தி முக்தியாக புனிதமாக கட்டுக் கோப்பாக நடைபெற வேண்டும் என்றார்.

**சித்தர்களின் குரல் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி( மட்டக்களப்பு) கூறுகையில்...**



இம்முறை பாதயாத்திரையில் சென்ற போது நான் கண்ட அசாதாரண விடயங்கள் பலத்த வேதனை தந்தன. குறிப்பாக வியாழை ஆற்றிலே மக்கள் சந்தோஷமாக பொழுதை கழிப்பது வழமை. இம் முறை அதற்கான வாய்ப்பை முருக பெருமான் வழங்கவில்லை .அதற்கு காரணம் முறையற்ற யாத்திரை. இது புனிதமாக்கப்பட வேண்டும் என்பதுதான் அடியேனின் அவா.

**கே .இரத்னேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், வீரமுனை) கூறுகையில் ...**



நான் பதினாறாவது வருடமாக பாதயாத்திரை செல்கிறேன். இம் முறை ஏற்பட்ட சோதனையும் வேதனையும் ஒரு தடவையாவது ஏற்படவில்லை .

அந்த அளவுக்கு கடும் வெயில் பயங்கர மழை கடும் வெள்ளம் நடக்க முடியாத அளவுக்கு சேறும் சகதியும். நிற்க தரிக்க படுக்க முடியாத ஈரநிலம். நிம்மதியாக தேனீர் வைத்து குடிக்க முடியாது .விறகு பெற முடியாமல் தத்தளித்த நிலைமையெல்லாம் இடம் பெற்றன. கடந்த 16 வருடங்களில் எந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் பாதயாத்திரை செல்லும்போது விடுதிகளில் தங்க வில்லை. ஆனால் இம்முறை வீரச்சோலையிலும் கதிர்காமத்திலும் விடுதி வாடகைக்கு எடுத்து தங்க வேண்டிய ஏற்பட்டது.

நாங்கள் கடந்த காலத்தில் வியாழ ஆற்றிலே மனம் விரும்பி சந்தோஷமாக காலத்தை கழிப்பது வழமை .ஆனால் இம்முறை அந்த இடத்திலேயே நிற்க முடியவில்லை .அந்த கங்கையில் நீராடி மணலில் ஆடிப்பாடி மகிழ்வதும் தனி சுகம். அந்த மணலில் படுத்து உறங்கும்போது இருக்கின்ற சுகம் எதிலும் இருக்க மாட்டாது. ஆனால் இந்த வாய்ப்பு முறை கிடைக்கவில்லை எனவே இந்த பாதயாத்திரை பக்தியாக ஆசார பூர்வமாக நடக்க வேண்டும் என்பதை அந்த வியாழன் அனர்த்தம் எடுத்து சொல்லி இருக்கின்றது. அது மாத்திரம் அல்ல இஸ்லாமியர்களுக்கு பௌத்தர்களுக்கு புனித யாத்திரையின் பொழுது லீவு வழங்கப்படுகின்றது ஏனைய சலுகைகள் வழங்கப்படுகின்றது .அது போன்று இந்துக்களுக்கு புனித பாதயாத்திரை களும் செய்து அரசு ஊழியர்களுக்கு லீவு வழங்குவதோடு ஏனைய சலுகைகளையும் வழங்க வேண்டும்.

**கணபதிப்பிள்ளை இராசலிங்கம் (நாகர்கோயில் யாழ்ப்பாணம்) கூறுகையில்..**



நான் 1969ல் எனது அப்பா உடன் 13 வயதில் நடந்து கதிராகாமத்திலே ராமகிருஷ்ண மிஷன் மடத்தில் இருந்தேன். அக்காலம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.மறக்கமுடியாது. அதன் பிற்பாடு நான் தனியாக வருகின்ற வருடம் இம்முறை எட்டாவது வருடமாகும்.கதிர்காமத்தில் இராமகிருஷ்ண மடம் எப்பொழுது கைவிடப்பட்டதோ அன்றில் இருந்து எனது வேதனை அதிகமாகியது.

ஆனால் இம்முறை எமது பாதையாத்திரை வரும் போது மட்டக்களப்பு கல்லடியில் உள்ள ராமகிருஷ்ண மடத்தை தரிசித்தது பெரும் சந்தோஷமாக இருந்தது. கதிர்காமத்தில் இருந்த அதே பகவான் இராமகிருஷ்ண சிலைகள் அங்கிருப்பது கண்டு மகிழ்ச்சியடைந்தேன். பற்றிக்ஸ் சாமி முதல் வேல்சாமி வரை பாதயாத்திரை வந்த அனுபவம் இருக்கின்றது.

முருகப்பெருமான் பல அற்புதங்களை காட்டி இருக்கின்றார். கதிர்காமத்தில் மீண்டும் இராமகிருஷ்ண மடம் அமைய வேண்டும். என்றார்.

**தளபதி சுப்பிரமணியம் ( வெற்றிலைக்கேணி)**



நான் கடல் தொழில் செய்து வருகிறேன் .இது தான் முதல் தடவை. எனது வருத்தம் குறைய வேண்டும் என்று பாதையாத்திரை ஆரம்பித்தேன் இடை நடுவிலே அது குறைந்துவிட்டது. முருகப்பெருமானின் அருள் கிடைத்துவிட்டது.

**சிங்கராசா ஜெயராசா ( யாழ்ப்பாணம்) கூறுகையில்..**



நான் ஏழாவது வருடமாக பாதயாத்திரை செல்கிறேன். சன்னதி ஆலயத்திலிருந்து இம் முறை தலைமை தாங்கி நடத்தி வந்த சந்தோசமும் இருக்கின்றது. எனது அண்ணன் கனடாவில் இருக்கின்றார் அவரது மூன்றாவது புதல்வன் நடக்க முடியாமல் இருந்தார். அவர் நடக்க வேண்டும் என்று நேர்த்தி வைத்து நான் நடந்து வந்தேன். இப்பொழுது அவர் நடக்க ஆரம்பித்து விட்டார். அதன் காரணமாக எனது அண்ணனும் இம் முறை பாதையாத்திரை கலந்து கொண்டார். இந்த பாதயாத்திரை மேலும் புனிதமாக்கப்பட வேண்டும் என்பது எனது அவா என்றார்.

**ச.சபாரெத்தினம்( வெற்றிலை கேணி)**



நான் எட்டாவது வருடம் என்ற பாதயாத்திரை வருகிறேன்.முருகன் அருளால் அனைத்து கிடைத்தது.

**கணேசராஜா விதுர்ஷன் ( பொறியியலாளர், காரைதீவு) கூறுகையில்..**



நான் இம் முறைதான் கன்னிப் பயணத்தை மேற்கொண்டேன். மிகவும் கஷ்டமான பயணமாக இருந்தாலும் வழி நெடுகிலும் கண்டு அனுபவித்தவைகள் மனதிற்கு சுகமாக இருக்கிறது. இதமாக இருந்தது. வழியில் அடைமழை. சமைக்க முடியாது. நிம்மதியாக உறங்க முடியவில்லை.நடக்க முடியாத அளவுக்கு சேறும் சகதியும்.குடிப்பதற்கு நீர் இல்லை.மழைநீரை வடித்து சூடாக்கி அருந்தினோம். வியாழ ஆற்றிலே தரிக்காமல் நேராக வள்ளி அம்மன் ஆற்றிற்கு சென்றோம். அனைத்தும் முருகன் செயல் என்று கருதி வைராக்கியத்துடன் நடந்தோம். இன்றும் அது ஒரு சுகானுபவமே. என்றார்.

**ச.நந்தபால( கற்கோவளம்) கூறுகையில்..**



இது ஏழாவது வருட யாத்திரை. வியாழ காட்டாற்று வெள்ளம் ஒரு படிப்பினை. இவ் யாத்திரை புனிதமாக்கப் படவேண்டும் என்றார்.

**வேலுப்பிள்ளை தர்மகுலசிங்கம் ( வடமராட்சி கிழக்கு தாளையடி) கூறுகையில்..**



நான் ஆறாவது வருடமாக வருகின்றேன் .எனது பிள்ளைக்கு புற்று நோய் கட்டி ஏற்பட்டிருந்தது .நெஞ்சு பகுதியிலே 16 கட்டிகள் மந்திகையில் அகற்றப்பட்டது. சுவாசப் பைக்கு கீழ் இன்னும் மூன்று கட்டிகள் இருக்கின்றன அதனை அகற்றமுடியாது என்று மந்திகையில் டாக்டர்கள் தெரிவித்தனர். கொழும்புக்கு சென்று அதனை செய்வதற்கு எமக்கு வசதி இல்லை. நான் முருகப்பெருமானை நினைத்து மிளகு தண்ணி குடித்து விரதம் பிடித்து நடந்து வந்தேன். இடையிலேயே கால் வெடித்து இரத்தம் எல்லாம் கசிந்தது. ஆனால் நான் தளரவில்லை . இன்று அந்த கட்டிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதே. முருகனின் அருள் கிடைத்து விட்டது.

**முத்துலிங்கம் காண்டீபன் ( காரைதீவு) கூறுகையில்...**



பாரம்பரிய பாதயாத்திரை வரலாற்றில் வியாழயில் இப்படி நடந்தது இதுவே முதல் தடவையாகும்.

விடிய விடிய மழை பொழிந்து கொண்டிருந்தது.

காட்டாற்று வெள்ளத்தால் திடீரென வியாழை ஆற்றின் நீர் மட்டம் 5 அடி வரை உயர்வடைந்தது.

இதனால் அடியார்கள் திக்குமுக்காட அரோகரா கோசம் விண்ணைப்பிளந்தது.

அடியார்கள் உயிரைக் கையில் பிடித்தபடி காட்டுக்குள் ஓடினர்.

ஆனால் அவர்களது உடைமைகளை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

அவர்களது உடுப்பு பைகள் செருப்புகள் உணவுப் பொதிகள் ரார்போலின் அனைத்தும் வெள்ளத்தில் அள்ளுண்டன.

நான் எனது பிள்ளைகளை வெள்ளத்தில் பொறுக்கி எடுத்தேன். ஆனால் அரிசி மரக்கறி உணவு பைகளை காப்பாற்ற முடியவில்லை. வெள்ளத்தில் அள்ளுண்டன. அருகில் உள்ள வள்ளி அம்மன் ஆற்றில் நின்ற அடியார்களுக்கு இராணுவம் முன்னதாக அறிவித்தது.

ஆனால் 3 ஆயிரம் அடியார்கள் தங்கியிருந்த வியாழையில் எந்த அறிவித்தலும் இல்லை. அதுவே நள்ளிரவு அவலத்திற்கு காரணம். பாதயாத்திரை மறுசீரமைக்கபடவேண்டும். என்றார்.

**ரி.சரஸ்வதி (சில்லாலை.பண்டத்தரிப்பு) கூறுகையில் ..**



நான் கனவிலும் நினைக்கவில்லை இப்படி ஒரு பயணம் அமையும் என்று. கடந்த நான்கு வருட காலமாக பஸ்ஸில் பயணம் சென்று வந்தேன்.2014 முதல் யாத்திரையாக சென்று வருகிறேன்.ஆறு பிள்ளைகளின் தாயான நான் முருகன் அருளால் சந்தோஷமாக இருக்கின்றேன். புனித பாதயாத்திரை புனிதமாக அமைய வேண்டும். என்றார்.

**நடராசா ரத்னசிங்கம் (மாமுலை வடமராட்சி) கூறுகையில்..**



2013 முதல் பயணத்தை மேற்கொண்டேன். வழியிலே முருகப்பெருமான் காட்சி தந்தார். இம்முறை வேலோடு மலைக்கு செல்ல முடியாமல் சித்தாண்டிலேயே தரித்து நின்ற பொழுது எனக்கு அங்கு வேலோடு முருகன் கனவிலே காட்சி தந்தார். உண்மையிலே இதனை மறக்க முடியாது என்றார்.

**பி.ஜெகதீஸ்வரன் ( திருகோணமலை) கூறுகையில்...**



இம் முறை வியாழ ஆற்றிலே இடம்பெற்ற அனர்த்தம் சாதாரணமானதல்ல. சிலர் வேலை தூக்கிக் கொண்டு பொய் பேசி ஏமாற்றி வருகின்றார்கள். சன்னதியில் இருந்து வருகிற வேல் மாத்திரம் தான் உண்மையானது. ஏனைய வேல்களுக்கு அவர்கள் அபிஷேகம் செய்வதில்லை. சிலர் செருப்போடு டவுசரோடு ஆசாரம் இல்லாமல் வேல் தாங்கி வருகிறார்கள் .10 வருடம் 15 வருடம் எனப் பொய் சொல்கிறார்கள். இப்படி பாவத்தோடு வருகின்ற காரணத்தால் இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கின்றதுஇனிமேலாவது வேல் தாங்குபவர்கள் புனிதமாக பயணிக்க வேண்டும். என்றார்.

மொத்தத்தில் கதிர்காம பாதயாத்திரை புதிய பரிமாணத்துடன் வர்த்தமானி பிரகடனம் செய்து புனிதமாக மேற்கொள்ளப்படவேண்டும்என்பதேஅனைவரதும்அவா.

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா
பாதயாத்திரீகர்
காரைதீவு

# சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை

# இலங்கையின் இறைமை இந்தியாவின் பாதுகாப்பு இரண்டும் கேள்விக்குள்



சீனா தனது மூலோபாயத்தினைப் பல தந்திரோபாயங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தினைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்றது.அதற்கு ஏற்றாற்போல ராஜபக்சக்களின் பலவீனத்தினை சீனா நன்கு பயன்படுத்தியுள்ளது.30 ஆண்டுகளாக விடுதலைப்புலிகளின் பலமானது இலங்கை அரசுக்கும்,இந்தியாவுக்குப் பக்கமான சீனாவின் இந்து சமுத்திர நுழைவுக்கும் சவாலாக இருந்தது.இந்த நிலையில் விடுதலைப் புலிகளை இலங்கையோடு சேர்ந்து அழித்ததன் மூலமாக அல்லது செயல் இழக்கச் செய்ததன் மூலமாக இலங்கை அரசுக்குப் புலிகளால் இருந்த சவாலை முறியடிப்பது என்ற போர்வையில் இந்து சமுத்திரத்தினுள் சீனா நுழைவதற்கான முதலாவது பெரும் காரியத்தை மேற்கொண்டது.

இரண்டாவது கட்டமாக சாத்தியவள ஆய்வுகள் செய்யாமல் அம்பாந்தோட்டையில் பாரிய துறைமுகமும்,மத்தள விமான நிலையமும் சீனாவின் பெருங்கடன் மூலமாக மகிந்த ஆட்சியில் அமைக்கப்பட்டன.இவற்றின் மூலமாகவும் இலங்கையைத் தனது கடன் பொறிக்குள் சீனா வீழ்த்தியது. அடுத்த கட்டமாக துறைமுக வருவாய் இல்லாமலும்,கடன் சுமையாலும் தள்ளாடி விழுந்த இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருட நீண்ட காலக்குத்தகை மூலம் சீனா கைப்பற்றியது. போட்சிற்றியினையும் சீனா தன் வசமாக்கியது.மேலும் கொழும்பின் தெற்கு முனையமும் சீனாவின் வசமாகியது.தற்போது நான்காவது கட்டமாக 'யுவான் வாங்-5' என்ற உளவு ஆய்வுக்கப்பலை அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நோக்கி சீனா நகர்த்துகின்றது.அந்த வகையில் இலங்கை இதனைத் தற்போது விரும்பாத போதும் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறது. இந்தியா இதனால் இலங்கை மீது நியாயமான ஆத்திரத்தை வெளிப்படுத்துகிறது. தற்காலிகமாகவேனும் அக்கப்பலை நிறுத்துமாறு இலங்கை கெஞ்சுகின்றது.சீனா பதில் அளிக்காமல் உள்ளது.இந்த நிலையில் இலங்கை விரும்பாத செயலை சீனா செய்வதால் இலங்கையின் இறைமை பாதிக்கப்பட்டுள்ளது என்பதுதான் அர்த்தம்.அதாவது தனது விருப்பத்தை அந்த அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் அந்த நாட்டின் இறைமை இளக்கப்பட்டுள்ளது என்பதே விளக்கமாகும்.இலங்கை இழைக்கின்ற தவறுகளால் இந்தியாவின் பாதுகாப்பு பலவீனமாவதை இந்தியா ஒரு போதும் விரும்பாது.அதற்கான எதிர்வினையினை இந்தியா மேற்கொள்வதில் தவறு இல்லை.

இந்தியா பட்டினியால் பாதிக்கப்படும் இலங்கை மக்களுக்கு உணவுக்கப்பலை அனுப்புவதை இலங்கை நன்றியுடன் நோக்க வேண்டும்.மாறாக இந்தியாவுக்கு எதிரான உளவுக்கப்பலை வரவேற்பது என்பது ராஜதந்திரமற்ற அநாகரிகச் செயலாகும்.இந்தியாவின் உள்ளகப்பாதுகாப்பு விடயங்களை மிக நெருக்கமாக இருந்து அவதானித்து,இந்தியாவுக்கு



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர், மட்டக்களப்பு

எதிரான திட்டங்களை சீனா வகுப்பதற்கு இலங்கை இடமளித்திருப்பதாக இந்தியா கருதுகின்றது.இந்த நிலையில் இந்தியா தன்னைத் தற்காத்துக்கொள்வதற்கும், ஈழத்தமிழர்களின் பாதுகாப்பையும் இணைத்துச் செயற்படுவதற்கான வாய்ப்பினை இலங்கை அளித்துள்ளது என்றுதான் கருதவேண்டியுள்ளது.தென்னிலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகமானது அடுத்த கட்டமாக சீனப்படையின் பிரசன்னத்திற்கும் இடமளிக்கலாம்.அது இந்தியாவை அச்சுறுத்த முடியும்.இக்காரணத்தை நியாயப்படுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களின் கடற்கரை ஓரங்களில் இந்தியரசின் படைகளை நகர்த்த வாய்ப்பு ஏற்படலாம். அந்த இடத்தில் ஈழத்தமிழரின் அரசியல் தீர்வு என்ற ஒப்புதலைத் தமிழர்கள் மூலம் இந்தியா பெறுவதற்கு முனையலாம்.ஆயின் இந்தியாவினதும் ஈழத்தமிழர்களினதும் பாதகாப்பு என்பது அரசியல் தீர்வு என்ற ஒரு புள்ளியில் சந்திக்க முடியும்.

**இந்தியா பட்டினியால் பாதிக்கப்படும் இலங்கை மக்களுக்கு உணவுக்கப்பலை அனுப்புவதை இலங்கை நன்றியுடன் நோக்க வேண்டும்.மாறாக இந்தியாவுக்கு எதிரான உளவுக்கப்பலை வரவேற்பது என்பது ராஜதந்திரமற்ற அநாகரிகச் செயலாகும்.இந்தியாவின் உள்ளகப்பாதுகாப்பு விடயங்களை மிக நெருக்கமாக இருந்து அவதானித்து,இந்தியாவுக்கு எதிரான திட்டங்களை சீனா வகுப்பதற்கு இலங்கை இடமளித்திருப்பதாக இந்தியா கருதுகின்றது. இந்த நிலையில் இந்தியா தன்னைத் தற்காத்துக்கொள்வதற்கும், ஈழத்தமிழர்களின் பாதுகாப்பையும் இணைத்துச் செயற்படுவதற்கான வாய்ப்பினை இலங்கை அளித்துள்ளது என்றுதான் கருதவேண்டியுள்ளது. தென்னிலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகமானது அடுத்த கட்டமாக சீனப்படையின் பிரசன்னத்திற்கும் இடமளிக்கலாம்**















கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல் விழா உற்சவ பத்தாம் நாள் பெரஹரா நேற்று இரவு இடம்பெற்ற போது...

படங்கள்: காரைதீவு சகா

# இன்றைய குடும்பங்களின் மூத்த பிள்ளைகளின் அவல நிலையும், அவர்களுக்குரிய அந்தஸ்தின் நிலையும்

அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் 16(3) ஆவது விதிப்படி, 'குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதுடன், அது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது ஆகும்' உயிரியல், மற்றும் சமூகவியல் அடிப்படையில் புதிய உறுப்பினர்களை உருவாக்குவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குவது குடும்பத்தின் முக்கியமான தொழிற்பாடுகளில் ஒன்றாக நோக்கப்படுகிறது'. இந்தக் குடும்பத்தின் கட்டமைப்பானது பகிர்தல், கவனித்தல், பராமரித்தல், பேணி வளர்த்தல் போன்றவற்றை வழங்கல் அல்லது பெற்றுக்கொள்ளல், ஒழுக்கநல உரிமைகள் மற்றும் கடமைகளைக் கொண்டிருத்தல், அறவழியிலான மற்றும் உணர்ச்சிபூர்வமான பிணைப்புக்களைக் கொண்டிருத்தல் ஆகியவற்றால் பேணப்படுகிறது.

பிள்ளைகளின் பார்வையில், குடும்பமானது, குடும்ப அமைப்புக்கான ஓர் அறிமுகத்தையும், வழிகாட்டுதலையும் வழங்கும் இடமாக இருக்கிறது. அதேவேளை பெற்றோரைப் பொறுத்த வரையில், குடும்பமானது, பிள்ளைகளை உருவாக்கி, சமூகத்துடன் அவர்களைப் பிணைக்கும் இடமாக இருக்கிறது. அவ்வாறான குடும்ப அத்தியாயத்தை தொடங்குவதன் அடித்தளத்தமாக அமைவது முதல் குழந்தையின் வரவே ஆகும்.

திருமண பந்தத்தில் பிணையும் மனங்களில் முதன் முதலாகத் தோன்றும் தாய், தந்தை என்ற மகத்துவக் கனவை குறைவின்றி அளித்து; சமுதாய அந்தஸ்தில் கலக்கமின்றி மிளிரச் செய்ய பூமியில் உதிக்கும் பொற் செல்வமாக ஒவ்வொரு தம்பதியினரதும் முதல் குழந்தை கருதப்படுகிறது. அந்தக் குழந்தையின் பிறப்பு எவ்வாறு கொண்டாடப்பட்டு விழாக்கோலம் பூணுகிறதோ அதே அளவுக்கு அவர்களது வளர்ப்பும், கவனிப்பும் பாரபட்சமின்றி பரிமாறப்பட வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதில் விவாதிக்க வேண்டிய உட்பொருள் இருப்பதாகத் தோன்றவில்லை.

தங்கள் மனங்களை கள்ளமின்றி குளிர்வித்த சின்னஞ்சிறிய பிஞ்சு சஞ்சலமின்றி வாழ்க்கையை திருப்தியுடன் கழிப்பதற்கான தூண்கள் பெற்றோர்களால் திட்டமிடப்பட்டு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்தி வலியுறுத்திச் சொல்ல மறக்கக் கூடிய கவனமற்ற சாதாரண ஒன்றும் இதுவல்லவே. ஆணினதும், பெண்ணினதும் தனிப்பட்ட வாழ்க்கை குழந்தைகளோடு இரண்டறக் கலந்து குடும்பமாக உருவாக்கப்படும் போதே திருப்திகரமான ஒரு முழுமைத்துவத்தை சமூகத்தில் எட்டும். ஒற்றைக் குழந்தையோடு பெரும்பாலான தம்பதிகளின் இல்லற வாழ்வு கடந்து விடுவதில்லை. அவர்களது செங்கலான வீட்டுக்கு உயிரூட்டவும், ஆயுள் முழுவதும் அவர்களது அக மகிழ்ச்சியை போற்றிப் பேணவும் பிள்ளைச் செல்வங்கள் மாத்திரமே போதுமானதாக திகழ்கின்றனர்.

தனது வீட்டை தனக்கு அடுத்ததாக அலங்கரிக்கும் மென் பாதங்களை தொட்டு முத்தமிட்டு தோளில் பம்பரமாக போட்டுச் சுற்றி விளையாடும் முதல் குழந்தையின் பரஸ்பர மனதை அள்ளித் தெளிக்க வார்த்தை மந்திரத்தைக் காட்டிலும் பெற்றோரின் உணர்வுபூர்வமான ஒற்றைத் தடவல் கோடி வாசனைப் பூக்களை முதல் குழந்தையின் மனதில் விதைக்கும். இயற்கையாகவே அக் குழந்தையின் சிந்தையில் தன் இரத்த பந்தங்களை காக்கும் காவல் அரண் பிறக்கும்.

காலப்போக்கில் அவர்களது நடத்தையிலும், செயல்களிலும் எதிர்மறையான எண்ணங்களும், வேற்றுமைக் குணங்களும் உலாவ பெற்றோரின் அன்பின் மாறுபட்ட வடிவங்களும், அதன் பரிணாமமுமே பிரதான காரண கர்த்தாவாக அமைகிறது. ஏனெனில் இரண்டாவது குழந்தை கிடைத்தவுடன் மூத்த செல்வத்தை வளர்ந்தவனாக நடாத்தும் முதல் புள்ளியே பிற்பட்ட மொத்த வாழ்க்கையின் சிதைவுக்கு ஆரம்பக் கீறலாக அமைகிறது. புதிதாகக் கிடைக்கும் மலர் மாத்திரம் மழலை அல்ல. உங்கள் அன்பை இறுக்கமாக தன்னுடன் பிணைத்திருக்கும் ஆரம்ப தொப்புள் கொடி உறவும் அச்சாணி இல்லாத தேர் போல திக்குத் தெரியாத கன்றே ஆகும். அடிபட்ட வலியில் கலங்கும் ஒரு கண்ணை பரிதவிப்போடு தடவிக் கொடுக்கும் நீங்கள், மற்ற கண் ஏக்கத்தின் வலியில் கலங்குவதை அவதானிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ளாமல் விட்டுகிறீர்கள் என்பது கவலைக்குரியதாகும். சராசரியாக பார்க்கின்ற போது பெரும்பாலான வீடுகளில் இது இயல்பான ஒரு விடயமாக அவர்கள் அறியாமலேயே அரங்கேறி விடுகிறது. இந்த நிலை வேரோடு களைய வேண்டியது. ஏனெனில் இன்றைய குழந்தைகளின் உளவியல் ரீதியான பாதிப்புக்களில் முதன்மை அங்கமாக பெற்றோர்களின் குழந்தை வளர்ப்பு முறைமை அவதானிக்கப்பட்டு வருகிறது.

சமத்துவம் என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான ஒரு வாதப் பொருள் மாத்திரம் அல்ல. சமத்துவம் எல்லா இடங்களிலும் காற்றைப் போல வியாபித்து நிறைந்து இருக்கும் துகள்களாகும். இது பிழைக்கின்ற போது அல்லது ஏற்றத்திலும் இறக்கத்திலும் வித்தியாசம் உண்டாகின்ற போது புரட்சிகளே வெடிக்கின்றது. இந்தப் புரட்சியின் ஒலி உங்கள் வீட்டு முதல் பிஞ்சின் மனதில் ஒலிக்கும் அபாயம் ஆபத்தானது என்பதை விட அலங்கோலமானது ஆகும். உள்ளுக்குள் சிந்தும் கண்ணீரையும், வெளியில் குளிர்விக்கும் சிரிப்பையும் பூண்டவர்களாக அவர்கள் வளர்க்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். நீங்கள் அவர்களை நடாத்தும் பாங்கே அடுத்த குழந்தைகளின் செயற்பாடுகளின் எதிரொலி ஆகும் என்பதை கவனத்திற் கொண்டும் நடந்து கொள்ளுங்கள். உங்களது மற்ற குழந்தைகளுக்கு அவர்கள் யார் என்பதை அடையாளப்படுத்திக் காட்டப் போவது உங்களில் இருந்தே தொடங்குகிறது.

'உன்னுடைய அண்ணன் அல்லது அக்கா'' என்று அறிமுகப்படுத்தும் விதம் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குமே ஒழிய அந்தஸ்தை நிலைநிறுத்தி விடாது. மேலும் இவை வெறும் மேலோட்டமான வார்த்தைகளாக மட்டுமே மற்ற குழந்தைகளின் மனதில் பதிந்துவிடும். ஏனெனில் அந்த உறவுக்கான மதிப்பும், மேன்மையும் பெற்றோகளான உங்களால் தராசு முள் போல சமத்துவப்படுத்தும் போது மட்டுமே சாத்தியமான நிகழ்வாகும்.

அவர்களது சகோதர உறவுகளின் பணிகளை கவனிக்கச் சொல்லும் போது அன்பின் கட்டளையாக, அன்பின் மறுவடிவமாக அவர்கள் முன் நீங்கள் திகழுங்கள். அவர்கள் உங்களிடம் இருந்து எதிர்ப்பார்ப்பதும் இதுவே. தன்னுடன் பிறந்தவர்களுக்காக எவற்றையும் இழக்க அவர்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள். அவ்வாறு இருந்தும் அவர்கள் வீணாக பிடிவாதம் பிடிக்க உங்களது முரண்பாடான ஏவல்களே காரணம் ஆகும். உங்களது உதிரங்கள் தான் அவர்கள் என்றாலும், அவர்களது எண்ணங்கள், எதிர்ப்பார்ப்புக்கள், ஆசைகள், உணர்வுகள் தனித்துவமானது. மனதால் அவர்களை ஆராதனை பண்ணாது; வெளித் தோற்றத்தில் அவர்களை மிளிரச் செய்ய அதிக அக்கறை செலுத்துவது அவர்களை சந்தோசப்படுத்தாது. மாறாக பசியில் இயலாது சுருண்டு விழுந்தவனைப் பார்த்து; உழைத்துச் சாப்பிடு என நிராகரிப்பதைப் போல விழலுக்கு இறைத்த நீராகவே உங்களது மொத்த கவனிப்பும் அவர்களிடத்தில் பூஜ்ஜியமாக நொருங்கி விடும். இதன் தொடர்ச்சி அவர்களது உடல், உள, சமூக விடயங்களில் மிகப் பெரிய எதிர்மறை தாக்கத்தை உண்டு பண்ணுவதாக பிற்காலத்தில் உருவெடுக்க கூடிய சாத்தியப்பாடுகள் அதிகமாக காணப்படுகின்றன.

இரண்டாவது குழந்தை வயிற்றில் உதித்த தருணத்தில் இருந்து முதல் குழந்தைக்கு போராட்ட காலம் ஆரம்பிக்கிறது என்பதை கருத்திற் கொண்டு உங்களது செயற்பாடுகளை திறம்பட அமைத்துக் கொள்ளுங்கள் அல்லது முடியுமாக இருந்தால் அவர்களது ஒவ்வொரு நடத்தையும் கூர்ந்து கவனியுங்கள். அது அவர்களை முறையாக கையாளுவதற்கு ஏற்றதாக அமையும். ஏனெனில் முதல் குழந்தைகள் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு விதமான மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர். ஆதலால் அவர்கள் உளரீதியாக பாதிப்படைவதை ஆரம்ப கட்டத்திலே கவனத்தில் கொண்டு செயற்படுவது ஏற்புடையது ஆகும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் முன்மாதிரியாக சுட்டிக் காட்டி பேசப்படுவது முதல் குழந்தைகளே ஆகும். இதனால் அவர்கள் கைவிடும் விடயங்கள் பலதரப்பட்டவையாக வரிசையில் நிற்கின்றன. மனிதனது அடிப்படை உரிமையான உணர்வுகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவது முதலில் தடை செய்யப்படுகிறது. ஒவ்வொரு விடயத்திற்கும் எடுத்துக்காட்டாக முதல் பிள்ளைகளை திகழ வைப்பது மறைமுகமாக அவர்களை ஒடுங்கிய ஒரு மனநிலைக்கு தள்ளுகிறது. மற்றும் குறிப்பிட்ட வயதுக்குரிய குறும்புத்தனங்கள் இல்லாமல் ஆக்கப்படுகிறது. இது அவர்களது வெளிச்சமான வாழ்க்கைக்கு அஸ்தமானமாகும். ஏனைய குழந்தைகளது வளமான வாழ்க்கைக்கான முதல் குழந்தைகளின் அர்ப்பணிப்பு உருகும் மெழுகுவர்த்தியின் நிலைக்கு அவர்களை ஆளாக்குகிறது.

மேலும், பெற்றோர்களது கண்ணோட்டத்தில் பிள்ளைகள் அனைவரும் ஒருமித்தவர்களாக கருதப்பட வேண்டும். இது மூத்த மகன், இது கடைசி மகள் என்ற எண்ணப் பாகுபாடு களைந்து எறியப்பட வேண்டும். ஏனெனில் பிள்ளைகளுக்கு இடையிலான முதல் பாகுபாடும், விரிசலும் இவ் வகையான பெற்றோரின் எண்ணவோட்டத்தில் இருந்தே பிறக்கிறது. ஒவ்வொரு வீட்டினிலும் உள்ள குழந்தைகளது வயதுகள் வேறுபட்டவையாக இருந்தாலும் அவர்களது எதிர்ப்பார்ப்புக்கள், தேவைகள், உணர்வுகள் உங்களிடம் ஒன்றுபட்டதாகவே இருக்கும். ஆதலால் அவர்களை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டிய வழிமுறையும் வளர்க்க வேண்டிய ஒழுங்கும் ஒன்றைத் தவிர ஒன்றாகவே இருத்தல் அவசியமாகும். அந்த மாறுபாடான ஒன்று, உங்களது ஒவ்வொரு குழந்தைகளினது வயதுக்கு ஏற்றது போல அவர்களது வாழ்க்கை, ஒழுக்கம் சீர்படத் தேவையான பொருத்தமான அறிவுரைகள் மட்டுமே ஆகும்.



குடும்பக் கட்டமைப்பில் விரிசல் விழாது உங்களோடு சேர்த்து, உங்களது ஏனைய குழந்தைகளையும் எதிர்ப்பார்ப்பின்றி மார்பிலும், தோளிலும் தாங்குபவர்களாக பெரும்பாலும் முதல் குழந்தைகளே காணப்படுகிறார்கள். தன் வயதுக்கு ஒத்த அத்தனையையும் தீண்டாது, கடமையை நிறைவேற்றுவதில் கண்கொத்திப் பாம்பாக இளவயதிலேயே அனுபவஸ்தவர்களாக திகழும் அவர்களை குடும்ப விடயங்களில் முதன்மைப் படுத்துங்கள். அவர்களோடு கலந்தாலோசித்து உங்களது மற்றைய வரப்பிரசாதங்களுக்கு குறைவின்றி அள்ளிக் கொடுங்கள். ஏனெனில் அவர்களது எல்லா வகையான இழப்புக்களுக்கும் நீங்கள் அன்பளிக்க வேண்டிய ஆதரவும், அணைப்பும் அவர்களுக்கான அந்தஸ்தும், முன்னுரிமையுமே ஆகும்.

பெற்றோர்களாகிய உங்களது அன்புக்காக மனதளவில் யாசிக்கும் நிலைக்கு அவர்களை ஆளாக்கி விடாதீர்கள். ஏனெனில் உங்களது அன்புக்கான வெற்றிடம் நீங்கள் அன்றி வேறு எவராலும் நிரப்ப முடியாதது ஆகும். எல்லாக் குழந்தைகளும் எதையும் புரிந்து நடக்கும் மனப்பக்குவம் உடையவர்கள் அல்ல. அதனால் அவர்களது ஒவ்வாத தன்மை, எதிர்ப்புக்கள் வேறு விதமாக குடும்பச் சூழலைத் தாக்கலாம். எப்பொழுதும் அவர்களிடம் ஒரு முரண்பாடான தன்மையும் காணப்படலாம். தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வழியறியாது சிக்கித் தவிக்கும் அவர்களை முதன்மையுடன் போற்றி வழி நடாத்துங்கள். உங்களது கரங்களில் உணர்ந்த முதல் உயிரின் ஸ்பரிசத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

உங்களை விட்டு விலகிச் செல்லும் அவர்களை மீண்டும் உங்களோடு இணைக்கப் போராடாது; நீங்கள் அவர்கள் அருகில் நெருங்க முயற்சியுங்கள். அவர்கள் அருகில் உறுதுணையாக என்றும் இருப்போம் என்பதை உணரச் செய்யுங்கள். அவர்களுக்கு உரித்தான உங்கள் அன்பை வெளிப்படையாக வெளிப்படுத்துங்கள். நீங்கள் அவர்களைத் தாங்கும் ஒற்றைத் துளி அன்பே உங்களது வீட்டில் ஏனைய அனைத்தையும் முறையான ஒழுங்கில் மோற்கொள்ள போதுமானது ஆகும். ஏனெனில் நீங்கள் அவர்களை தாங்குவதன் சக்தி மற்றும் சுடர் அவர்கள் ஊடாக உங்கள் மொத்த குடும்பமும் நிலைகுலைந்து போகாது நிறுத்திப் பிடிக்கும். அவர்களது அத்தனை தேவைகளும் இயல்பானது மற்றும் சாதாரணமானது. அதைப் புரிந்து கொள்ளுங்கள். மற்ற குழந்தைகளின் கவனிப்பில் இவர்களை அலட்சியப்படுத்தி புறக்கணித்து விடாதீர்கள். எந்த உறவிலும் புறக்கணிப்பை தாங்கா முடியாத அவர்களுக்கு பெற்றோரின் புறக்கணிப்பு அதிகளவான மனவேதனைக்கு உள்ளாக்கும். இவ்வளவு நாட்கள் குழந்தை வயதில் தெரிந்த அவர்கள் அடுத்த குழந்தையின் வருகையுடன் பெரிய மனிதர்களாக, வளர்ந்தவர்களாக கணிக்கப்படுவது பிழையானது. மனதளவில் குமுறிக் கண்ணீர் வடிக்கும் தனித்தவர்களாக அவர்களை ஆக்கி விடாதீர்கள். ஏனெனில் அவர்கள் கேட்க ஆசைப்படும் பெற்றோர்களின் அன்பின் மொழி இயல்பானது என்பதை விட இயற்கையான உணர்வாகும்.

மூத்த குழந்தைகள் பெற்றோர்கள் மீது அளவுகடந்த பாசம் வைத்திருக்கிறார்கள். அதனால் அனைத்து துன்பங்களையும் தனக்குள்ளே புதைத்து வீட்டின் நிம்மதியை பேணுகிறவர்கள். விட்டுக் கொடுப்பதில் முதல் இடம் பிடித்தவர்கள். மேலும் முதல் குழந்தைகள் பெற்றோரைச் சார்ந்தே தங்கள் வாழ்வின் முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு காரணமாக அமைவது பெற்றவர்கள் மீது வைத்திருக்கும் மரியாதையும் நன்றியுணர்வுமே தவிர அவர்களால் தனித்து எதையும் சமாளித்து வாழ முடியாது என்பதனால் அல்ல. பிறந்தவுடன் சுவாசித்த தாயினதும், தந்தையினதும் மூச்சுக் காற்றின் விசுவாசிகள் அவர்கள்.

தற்கால நமது நாட்டு சூழ்நிலையில் பல குடும்பங்களின் முதுகெலும்பாக தொழிற்படுவது மூத்த பிள்ளைச் செல்வமே ஆகும். தனது தந்தைக்கும் தாய்க்கும் அடுத்து பொறுப்புக்களை தன் மேல் ஏற்றி வைக்கும் குடும்பத்தின் விடிவெள்ளிகள் அவர்கள். நமது சமூகத்தில் அவ்வாறான விடிவெள்ளிகளின் வியர்வையில் பலரது வாழ்வு நன்றாக செழித்து நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது. அண்ணா அக்கா என்ற உறவுமுறையை தாண்டி அவர்களுக்குள்ளும் தாய்மையும் தந்தையின் தியாகமும் பிறப்பிலேயே வேரூன்றி உள்ளது. தாய்க்கு முடியாத காலத்தில் தனது உடன் பிறப்புகளுக்கு தாயாக மாறும் அவளது அன்பில் தாயானவள் அவள். தந்தைக்கு அடுத்து குடும்பத் தேவைகளின் வரிசையில் தன்னைத் தொலைக்கும் அண்ணன் தந்தையின் மறுவடிவமானவன். சிறுவயது தொடக்கம் தனக்கென எதுவும் சேமிக்காது, உணர்வுகளின் போராட்டத்தில் அடைப்பட்டு குடும்பத்தின் நலனுக்காக பாடுபடும் குருத்துக்கள் சிறுவயதில் இருந்தே பொத்திப் பாதுகாத்து அன்புகாட்டப்பட வேண்டியவர்கள். உங்களது குடும்ப முத்திரையாக அடையாளம் காட்டும் அந்தஸ்திற்கு தகுதியானவர்கள். ஏனெனில் மூத்தவர்களின் இழப்பில் இளையவர்களின் மகிழ்ச்சி அடித்தளம் இடப்படுகிறது.

சமூகத்தோடு வேரூன்றி இருக்கும் உங்களுக்கு மூத்த குழந்தைகளின் வாழ்க்கைப் பற்றிய புரிதல் ஓரளவுக்கு தெரிந்திருக்கும். ஏனெனில் பெற்றோர்களாக இருக்கும் நீங்கள் உங்களது தாய்க்கும் தந்தைக்கும் பிள்ளைகளாக இருந்தவர்கள், இன்றும் இருக்கிறவர்கள். ஆதலால் உங்களது கடந்தகால வீட்டுச் சூழலை சற்று புரட்டிப் பார்க்கும் போது, அனைத்தும் உணர்ந்து கொள்ள சிறுவயது ஞாபகங்கள் போதுமானது. சிலருக்கு சந்தோஷத்தை கொட்டும் இளம் வயது, பலருக்கு வடுக்களின் சேமிப்பு பெட்டமாக அமைந்து விடுகிறது. அனுபவத்தில் கற்றதை உபயோகிக்க வேண்டிய தக்க சமயத்தில் சரியாக பிரயோகிங்கள். அவர்கள் உங்களது குழந்தைகள். உங்களது சந்தோசங்கள். உங்களது இலட்சியங்கள். உங்களது கனவுகள். சுருக்கமாகச் சொன்னால் உங்களது எதிர்காலமே அவர்கள் தான். அவ்வாறான அவர்களின் மனது நீங்களே அறியாது வலியில் இளைப்பாற விட்டு விடாதீர்கள். அச் செல்வங்கள் உங்களால் துன்பப்படுகின்றது என்பதை தெரிந்து கொள்ளும் போது; அதைத் தாங்கும் மனவலிமை உங்கள் ஒருவருக்கும் இருக்கப் போவதில்லை. ஏனெனில் பெற்றோர்களின் அன்பு புனிதமானது. ஆனால் அது தடம் மாறாது ஒரே வகையில் செலுத்த கற்றுக் கொள்ளுங்கள். உங்களது பொறுப்புக்களை, கடமைகளை நிறையாக பூரணப்படுத்துவது போல உணர்வின் உள்ளத்தையும் அலங்கரித்து அழகு பாருங்கள். ஏனெனில் அன்பின் இழப்பே! பலரது வாழ்வின் திருப்பங்களுக்கு வித்திடுகிறது. உங்களது வளர்ப்பின் நற்பெயரும் நல்லாசியும் அவர்களின் அர்த்தமுள்ள வாழ்க்கையினிலே என்றும் தங்கியுள்ளது. காலம் கடந்த பின் எதுவும் கிடைக்காது என்பது பெற்றோரின் அன்பின் அதிகாரத்தில் எழுதப்படாத ஒன்றே ஆகும். பெற்றோரின் அன்பு நிறைவேற்ற முடியாத நிராசை அல்ல. எனவே, எத்தனை வயதை அடைந்தவர்களாக உங்கள் முதல் குழந்தை இருந்தாலும், அவர்கள் மனதளவில் உங்கள் அன்புச் சோலைக்காக காத்திருக்கும் ஊமைக் கிளிகள். ஆகையால் அவர்களின் மனங்களை இனிமேலாவது பூந்தென்றலாக சாந்தப்படுத்தி விடுங்கள். எதுவுமே அறியாது உங்களை மட்டுமே முழுவதும் நம்பி பூமியில் அவதரித்த அவர்களை அன்பின் வழியில் ஒரே போல வழிப்படுத்துங்கள்.

நஸ்லுன் ஹிக்மா செய்யதஹமட்
காத்தான்குடி
யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவி